சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு 96005 48581

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com
VOLUME : 01 ISSUE: 173 17.12.2025 WEDNESDAY MARGAZHI : 2 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 173 17.12.2025 புதன்கிழமை மார்கழி : 2 விலை : ரூ.5/-

3 பாக். தூண்டிவிடும் பயங்கரவாதத்தை முழு பலத்துடன் எதிர்கொள்வோம்: ஐநாவில் இந்தியா திட்டவட்டம்
4 இது விபத்து அல்ல; திமுகவின் அலட்சியத்தால் ஏற்பட்ட கொலை: அண்ணாமலை காட்டம்
2 பொங்கல் கொண்டாட தமிழகம் வருகிறார் பிரதமர் மோடி

# ஈரோட்டில் விஜய் பிரச்சாரம்: தொண்டர்களுக்கு தவெக வெளியிட்ட முக்கிய அறிவிப்பு!

சென்னை: டிச.17-

ஈரோட்டில் டிச 18ம் தேதி நடக்கவிருக்கும் 'விஜய் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி' தொடர்பாக 11 வழிகாட்டு நெறிமுறைகளை தவெக பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வரும் 18ம் தேதி (வியாழக்கிழமை) ஈரோடு மாவட்டம், மூங்கில்பாளையத்தில் காலை 11.00 மணிக்கு தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யின் ஈரோடு மாவட்ட மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது. காவல் துறையின் முழுமையான வழிகாட்டு நெறிமுறைகளின்படி நடைபெற உள்ள இந்த மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு கட்சியினரும், பொதுமக்களும் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

தவெக தலைவர் விஜய், தன்னை நேசிக்கும் மக்களின் பாதுகாப்பில் எள்ளளவும் சமரசம் செய்துகொள்ளாதவர். எனவே இந்த மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியின்போது கழகத் தோழர்களும் பொதுமக்களும் பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என்று விஜய்யின் ஒப்புதலோடு கேட்டுக்கொள்கிறோம்.

1. மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்காக அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பாக்ஸ்களிலும், காவல் துறையின் அறிவுறுத்தலின்படி பங்கேற்பாளர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

2. கப்பிணிப் பெண்கள், கைக்குழந்தையுடன் இருக்கும் சகோதரிகள், முதியவர்கள், உடல்நலம் குன்றியோர், பள்ளிச் சிறுவர், சிறுமியர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோர், விஜய்யின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு அனுமதி இல்லை. இவர்கள் வீட்டில் இருந்தபடியே நேரலையில் காணலாம்.

3. இந்த மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு வரும் போதும், நிகழ்ச்சியை முடித்துவிட்டுச்



செல்லும் போதும், விஜய்யின் வாகனத்தை இருசக்கர வாகனங்களிலோ அல்லது வேறு வாகணங்களோ பின்தொடர்வது, போக்குவரத்திற்கு இடையூறாகச் செயல்படுவது போன்ற செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும்.

4. காவல் துறையின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, விதிகளுக்கு உட்பட்டு நடந்துகொள்ள வேண்டும். போக்குவரத்து விதிகளை முழுவதுமாகப் பின்பற்ற வேண்டும். பட்டாசு வெடிப்பது உள்ளிட்ட அனைத்து வகையான வரவேற்பு நடவடிக்கைகளுக்கும் அனுமதி இல்லை.

5. காவல்துறை அனுமதித்துள்ள இடங்களில் மட்டுமே வாகனங்களை நிறுத்த வேண்டும்.

6. மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில், மேலும் அங்கே செல்லும் வழிகளில் மற்றும் திரும்பி வரும் வழிகளில் சட்டம் ஒழுங்கைப் பேணிப் பாதுகாக்க உதவும் வண்ணம் மிகவும் கண்ணியத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.

தவெகவுக்கு அவப்பெயரை உண்டாக்கும் உள்நோக்கம் கொண்டு யாரேனும் செயல்பட முற்பட்டால், அதற்கு இடம் கொடுக்காதவாறு கவனத்துடன் செயல்பட வேண்டும். விஜய்யின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வரும் நாம் அனைவரும் சகோதர சகோதரிகளே. இதைக் கருத்தில் கொண்டு பிறர் மனம் புண்படும் வகையில் பேசுவதோ, நடந்துகொள்வதோ கண்டிப்பாகக் கூடாது.

7. எளிதில் அடையாளம் காணும் வகையில், தன்னார்வலர்கள் சீருடை அணிந்து தங்களது பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

8. உயர் நீதிமன்றத்தின் உத்தரவின்படி, தேசிய நெடுஞ்சாலைகளிலும் பிற சாலைகளிலும் நெடுஞ்சாலை / இதர சாலைகளின் இரு புறங்களிலும் பிளக்ஸ் பேனரோ, அலங்கார வளைவுகளோ, கொடி கட்டப்பட்ட கம்பிகளோ உரிய அனுமதி பெறாமல் வைக்கக் கூடாது.

9. மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெறும் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் கட்டடங்கள், காம்பவுண்ட் சுவர்கள், மரங்கள், வாகனங்கள் (பஸ், வேன், ஆட்டோ மற்றும் இருசக்கர வாகனங்கள்), கொடிக் கம்பங்கள் ஆகியவற்றின் மீது ஏறக் கூடாது. மின்விளக்குக் கம்பங்கள் (EB LAMP POSTS), மின் கம்பங்கள் (EB POSTS), மின்மாற்றிகள் (EB Transformers) ஆகியவற்றின் அருகில் செல்லக் கூடாது. சிலைகள் மற்றும் அவற்றைச் சுற்றி ஏதும் பாதுகாப்பு கிரில் கம்பிகள், தடுப்புகள் அமைக்கப்பட்டிருந்தால் அவற்றின் அருகில் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

10. மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியின் போது, அப்பகுதிகளில் ஆம்புலன்ஸ் வாகனங்களுக்கும் பொது மக்களுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் பள்ளி மாணாக்கர்களுக்கும் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோயாளிகளுக்கும் எவ்விதப் போக்குவரத்து இடையூறும் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும்

11. விஜய்யின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி முடிந்தவுடன் அனைவரும் அமைதியான முறையில், யாருக்கும் எவ்வித இடையூறும் ஏற்படுத்தாமல் கலைந்து செல்ல வேண்டும்.

தவெக தலைவர் விஜய்யின் ஒப்புதலோடு வழங்கப்பட்டுள்ள இந்த வழிகாட்டு நெறிமுறைகளைக் கழகத் தோழர்களும் பொதுமக்களும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி வெற்றியடைய, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களான மாவட்டப் பொறுப்பாளர்களுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ் கடவுள் முருகனை கொச்சைப்படுத்துவதா? தமிழக அரசுக்கு பாஜக கண்டனம்

சென்னை: டிச.17-

"இரண்டு மனைவிகள் இருந்தால் இரண்டு இடத்தில் தீபம் ஏற்ற முடியாது" என தமிழ் கடவுள் முருகனை கொச்சைப்படுத்துவதா? என தமிழக பாஜக செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்ற தனி நீதிபதி சுவாமிநாதன் உத்தரவிட்டதை எதிர்த்து திருப்பரங்குன்றம் கோயில் செயல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் ஆகியோர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு சார்பில் திருப்பரங்குன்றம் மலையில் உள்ளது தீபத்தூண் என்பதற்கு ஆதாரம் இல்லை என்று உண்மைக்கு புறம்பாக உள்நோக்கத்துடன், வரலாற்றைத் திரித்து தமிழக அரசு வாதம் வைத்துள்ளது.

மேலும், இந்து மதத்தின் நம்பிக்கையையும், சனாதன தர்மத்தையும் அவமதிக்கும் வகையில், தமிழ் கடவுள் முருகனையும் திருப்பரங்குன்றம் வழிபாட்டு உரிமையையும் கொச்சைப்படுத்தும் வகையில் முருகனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தாலும், தீபம் இரண்டு இடத்தில் ஏற்ற முடியாது.

இரவு நேரங்களில் வெளிச்சத்துக்காக இந்தத் தூண்களைப் பயன்படுத்தினர். இந்தக் கம்பங்கள் கார்த்திகை தீபத்துக்காக அல்ல, மாறாக முனிவர்கள் பயன்படுத்திய தனிப்பட்ட வெளிச்சத்துக்காகவே உருவாக்கப்பட்டவை என்று பொய் பிரச்சாரங்கள் ஆதாரமில்லாமல் முன்வைக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றத்தின் மீது நம்பிக்கை வைத்து திருப்பரங்குன்றம் முருக பக்தர்கள், ஆன்மிக அன்பர்கள், சட்டப்படி உரிமை போராட்டம் நடத்தும் போது, தமிழக அரசு சனாதன தர்மத்துக்கு எதிராக, இந்து மத கோட்பாடுகளை கொச்சைப்படுத்தும் வகையில், இந்து மத கடவுள்களை இழிவு படுத்தும் வகையில், இந்து மத நம்பிக்கைகளை சிதைக்கும் வகையில் செயல்படுவது கடும் கண்டனத்துக்குரியது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 'புகாரில் முகாந்திரம் இல்லை' மருத்துவக் கல்லூரிகள் தொடர்பான இபிஎஸ் மீதான வழக்கில் அரசு தகவல்

சென்னை: டிச.17-

11 மருத்துவக் கல்லூரிகள் கட்டியதில் முறைகேடு நடந்ததாக, முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிரான புகாரில் முகாந்திரம் இல்லை என முடித்து வைக்கப்பட்டதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

முந்தைய அதிமுக ஆட்சி காலத்தில், தமிழகத்தில் திருவள்ளூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, நாமக்கல், ராமநாதபுரம், திண்டுக்கல், நாகப்பட்டினம், விருதுநகர், திருப்பூர், கிருஷ்ணகிரி, நீலகிரி ஆகிய 11 மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் கட்டப்பட்டன.

முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, பொதுப் பணித் துறை அமைச்சராக பதவி வகித்த காலத்தில் கட்டப்பட்ட இந்த மருத்துவ கல்லூரிகள், தேசிய மருத்துவ ஆணையத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு கட்டப்படவில்லை என்றும், மருத்துவக் கல்லூரிகள்



கட்டியதில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகவும், இது சம்பந்தமாக சிபிஐ விசாரணை நடத்த உத்தரவிடக் கோரி திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தை சேர்ந்த விவசாயி என்.ராஜசேகரன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், 'மத்திய அரசின் 60 சதவீத நிதி பங்களிப்புடன் 11 மருத்துவக் கல்லூரிகள் கட்டப்பட்டுள்ளதால், இந்த விவகாரம் குறித்து சிபிஐ விசாரணை செய்ய வேண்டும். சிபிஐ உள்ளிட்ட மத்திய புலன் விசாரணை அமைப்புகள் விசாரணை செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதியை திரும்பப் பெற்று தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது.

இந்த அரசாணையை ரத்து செய்து, நான் அளித்த புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கும்படி சிபிஐக்கு உத்தரவிட வேண்டும்' என்று மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, தமிழக அரசுத் தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர், 'மனுதாரரின் புகார் குறித்து லஞ்ச ஒழிப்புத் துறை விசாரணை நடத்தியது. இதில், புகாரில் முகாந்திரம் இல்லை என தெரியவந்ததை அடுத்து, புகார் முடித்து வைக்கப்பட்டது' எனத் தெரிவித்தார்.

முகாந்திரம் இல்லை என புகார் முடித்து வைக்கப்பட்டதை நீதித் துறை ஆய்வுக்கு உட்படுத்த முடியுமா என்பது குறித்து, உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற தீர்ப்புகளை மேற்கோள்காட்டி விளக்கமளிக்கும்படி, மனுதாரருக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை நான்கு வாரங்களுக்கு தள்ளிவைத்தனர்.

## "மக்களிடம் மன்னிப்பு கோருகிறேன்; 910 மாதங்களில் காற்று மாசுபாட்டை சரிசெய்ய முடியாது" : டெல்லி அமைச்சர்

புது டெல்லி: டிச.17-

"காற்று மாசுபாட்டுக்காக டெல்லி மக்களிடம் மன்னிப்புக் கோருகிறேன். எந்த ஒரு அரசாங்கமும் ஒன்பது முதல் பத்து மாதங்களுக்குள் மாசுபாடு அளவை முழுமையாகக் குறைப்பது சாத்தியமற்றது" என்று டெல்லி சுற்றுச்சூழல் அமைச்சர் மஞ்சிந்தர் சிங் சிர்சா தெரிவித்தார்.

டெல்லியில் காற்றின் தரம் பாதிக்கப்பட்டு மிகவும் கடுமையான நிலையில் உள்ளது. இதுகுறித்து செய்தியாளர் சந்திப்பில் பேசிய அமைச்சர் மஞ்சிந்தர் சிங் சிர்சா, "டெல்லி மக்களிடம் நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். எந்த ஒரு அரசாங்கத்தாலும் ஆட்சியமைத்த 910 மாதங்களுக்குள் காற்று மாசுபாட்டின் அளவை முழுமையாகக் குறைப்பது சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊழல் நிறைந்த ஆம் ஆத்மி கட்சி அரசாங்கத்தை விட நாங்கள் சிறப்பாகச் செயல்படுகிறோம். மேலும் ஒவ்வொரு நாளும் காற்றின் தரக்குறியீடு அளவு கினிமி ஐ குறைத்துள்ளோம். இந்த காற்று மாசுபாடு என்ற நோயை ஆம் ஆத்மி கட்சிதான் நமக்கு கொடுத்தது, அதைச் சரிசெய்ய நாங்கள் பணியாற்றி வருகிறோம்" என்று அவர் கூறினார்.

டெல்லியில் இன்று (செவ்வாய்) காலை 8 மணியளவில் ஒட்டுமொத்த காற்றுத் தரக் குறியீடு (கினிமி) 378 ஆகப் பதிவு செய்யப்பட்டது. இதனால் டெல்லியில் காற்றின் தரம் 'மிகவும் மோசமான' பிரிவிலேயே உள்ளது. எனவே நகரம் முழுவதும் உள்ள மக்கள் சுவாசம் தொடர்பான பிரச்சினைகளால் சிரமப்பட்டு வருகின்றனர். நேற்று டெல்லியில் ஏக்யூஐ 498 ஆக இருந்ததிலிருந்து இன்று கணிசமான அளவு குறைவான ஏக்யூஐ பதிவாகியுள்ளது.

## 100 நாள் வேலைத் திட்டம் பெயர் மாற்றம்: சென்னையில் டிச.18ல் காங். ஆர்ப்பாட்டம்

சென்னை: டிச.17-

100 நாள் வேலை திட்டத்திலிருந்து மகாத்மா காந்தியின் பெயரை நீக்குவதை கண்டித்து டிச.18ஆம் தேதி காலை சென்னை அண்ணா சாலை தலைமை தபால் நிலைய அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'மன்மோகன் சிங் தலைமையில் 2004ஆம் ஆண்டு அமைந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகிற வகையில் கிராமப்புற மக்களிடையே நிலவுகிற வேலையில்லா திண்டாட்டத்தை போக்கும் வகையில் வறுமையை ஒழிக்கின்ற நோக்கத்தில் 2006ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் கொண்டு வரப்பட்டது.

அதன் பிறகு அக்டோபர் 2009 முதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் என்று பெயரிடப்பட்டது. கிராமப்புற மக்களின் முன்னேற்றத்திற்காக தமது வாழ்நாளில் பெரும் பகுதியை தியாகம் செய்த மகாத்மா காந்தியடிகளின் பெயரை அத்திட்டத்திற்கு சூட்டுவது பொருத்தமாக அமைந்தது.

கிராமப்புற மக்களின் குறைந்தபட்ச ஊதிய பாதுகாப்பு திட்டமான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் என்கிற பெயரை பூஜ்ய பாபு கிராமின் ரோஜ்கர் யோஜனா என்று பெயர் மாற்றம் செய்திட மக்களவை கூட்டத் தொடரில் ஒன்றிய பா.ஜ.க. அரசு மசோதாவை தாக்கல் செய்திருக்கிறது. இதிலிருந்து மகாத்மா காந்தியின் மீது பா.ஜ.க. வைத்திருக்கும் வன்மம் வெளிப்படுகிறது.

எனவே, 100 நாள் வேலை திட்டத்திலிருந்து மகாத்மா காந்தியின் பெயரை நீக்குவதை வன்மையாக கண்டிக்கும் வகையில் எனது தலைமையில், சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர்களின் முன்னிலையில் 18.12.2025 வியாழக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் சென்னை அண்ணா சாலை தலைமை தபால் நிலைய அலுவலகம் முன்பு ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

நடைபெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்தியா கூட்டணி தலைவர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர்கள், முன்னாள் மத்திய அமைச்சர்கள், அகில இந்திய காங்கிரஸ் இந்நாள் முன்னாள் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற காங்கிரஸ் இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், மாநில காங்கிரஸ் நிர்வாகிகள், மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள், சென்னை பெருநகர மாநகராட்சி மாமன்ற காங்கிரஸ் இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், முன்னணி அமைப்புகள், இதர துறைகள் மற்றும் பிரிவுகளின் தலைவர்கள், சர்க்கிள் மற்றும் வட்ட கமிட்டி தலைவர்கள் மற்றும் அதன் அனைத்து நிலை நிர்வாகிகளும் பங்கேற்க உள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் பேரியக்க நண்பர்கள் பெருந்திரளாக பங்கேற்று ஆர்ப்பாட்டம் வெற்றியடையச் செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# பொங்கல் கொண்டாட தமிழகம் வருகிறார் பிரதமர் மோடி



சென்னை, டிச.17-

தமிழக பா.ஜ., தொண்டர்களுடன் இணைந்து, பிரதமர் மோடி, பொங்கல் பண்டிகை கொண்டாட உள்ளார்.

தமிழகத்தில் ஜன., 15ல் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்த பண்டிகையை, பிரதமர் மோடி தமிழகம் வந்து, பா.ஜ.,வினர் உடன் கொண்டாட முடிவு செய்துள்ளார்.

திருப்பூர், ஈரோடு என, கொங்கு மண்டலத்தில் உள்ள ஏதேனும் ஒரு மாவட்டத்தில், உள்ளூர் மக்களுடன் இணைந்து, பொங்கல் கொண்டாட உள்ளார். அவருடன், ஒரே சமயத்தில், 10,000 மகளிர் பொங்கல் வைக்க, தமிழக பா.ஜ.,வினர் திட்டமிட்டுள்ளனர்.

இதுகுறித்து, தமிழக பா.ஜ., மாநில நிர்வாகி ஒருவர் கூறுகையில், 'பிரதமர் மோடி, ஜன., 10 அல்லது 12ல் தமிழகம் வந்து பொங்கல் கொண்டாட வாய்ப்புள்ளது. 'தேர்தல் சமயத்தில் மோடியின் பொங்கல் கொண்டாட்டம், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியினரை உற்சாகப்படுத்தும் வகையில் அமையும்' என்றார்.

# தமிழக காங்கிரஸ் கோஷ்டிகளிடம் மேலிட பொறுப்பாளர் ஆலோசனை



டில்லி, டிச.17-

சட்டசபை தேர்தல் கூட்டணி மற்றும் தொகுதி பங்கீடு குறித்து, டில்லியில் தமிழக காங்கிரஸ் முன்னணி தலைவர்களுடன், மேலிட பொறுப்பாளர் கிரிஷ் ஷோடங்கர் ஆலோசனை நடத்தினார்.

டில்லியில் நேற்று முன்தினம் ஓட்டு திருட்டை கண்டித்து, காங்கிரஸ் சார்பில், ராகுல் தலைமையில் பேரணி நடந்தது. அதில், தமிழக காங்கிரஸ் முன்னணி தலைவர்களும், நிர்வாகிகளும் பங்கேற்றனர்.

தி.மு.க., கூட்டணி, தொகுதி பங்கீடு குறித்து, தமிழக காங்கிரசின் ஐவர் குழு, முன்னாள் தலைவர்கள் மற்றும் தமிழக எம்.பி.,க்களிடம், ராகுல் ஆலோசனை நடத்துவார் என கூறப்பட்டது.

ஆனால், பேரணி முடிந்தது ம், அன்று இரவே ராகுல், ஜெ ர்மனி சென்று விட்டார். இதனால், ஆலோசனை கூட்டம் ரத்து செய்யப்பட்டது. இந்நிலையில், டில்லியில் உள்ள கான்ஸ்டிடியூஷன் கிளப்பில், மேலிட பொறுப்பாளர் கிரிஷ் ஷோடங்கர் தலைமையில் நேற்று கலந்துரையாடல் கூட்டம் நடந்தது.

தமிழக காங்., தலைவர் செல்வப்பெருந்தகை, சட்டசபை காங்., தலைவர் ராஜேஷ்குமார், எம்.பி.,க்கள் மாணிக் தாகூர், கார்த்தி, விஷ்ணுபிரசாத், ராபர்ட் புரூஸ், விஜய் வசந்த் உள்ளிட்ட சிலர் மட்டும் தங்கள் கருத்துகளை தெரிவித்தனர்.

கலந்துரையாடல் முடிந்த பின், தமிழகத்தில் இருந்து சென்ற மாநில நிர்வாகி கள், முன்னணி தலைவர்களை தனித்தனியாக சந்தித்து, கிரிஷ் ஷோடங்கர் கருத்துகளை கேட்டறிந்தார்.

இது குறித்து, காங்கிரஸ் வட்டாரங்கள் கூறியதாவது: கடந்த 2026 சட்டசபை தேர்தலுக்கு பின் அமைந்த தி.மு.க., ஆட்சிக்கு பெரும்பான்மை இல்லை; காங்கிரஸ் தயவில் ஆட்சி நடந்தது.

ஆனால், தி.மு.க., ஆட்சியில் காங்கிரசுக்கு பங்கு தரவில்லை; அதற்கு பரிகாரமாக, இம்முறை ஆட்சியில் பங்கு என்ற நிபந்தனையுடன் கூட்டணி அமைக்க வேண்டும்.

அதற்கு தி.மு.க., உடன்படவில்லை என்றால், ஆட்சியில் பங்கு தர தயாராக இருக்கும் விஜய் தலைமையிலான த.வெ.க.,வுடன் கூட்டணி அமைக்க வேண்டும் என சில எம்.பி.,க்களும், பெரும்பான்மையான நிர்வாகிகளும் கிரிஷ் ஷோடங்கரிடம் வலியுறுத்தி உள்ளனர். இவ்வாறு அக்கட்சி வட்டாரங்கள் கூறின.




# புதுச்சேரியில் 85,531 வாக்காளர்கள் நீக்கம்: மொத்த வாக்காளர்களில் 10%

புதுச்சேரி, டிச.17-

புதுச்சேரியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணி முடிவடைந்து, வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

அதன்படி, புதுச்சேரி மாவட்டத்தில் 8 லட்சத்து 51 ஆயிரத்து 775 வாக்காளர்கள் உள்ளதாகவும், 85,531 வாக்காளர்கள் நீக்கப்பட்டதாகவும் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தெரிவித்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்படி புதுச்சேரி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணி முடிவடைந்த நிலையில், வரைவு வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி நிர்வாகிகள் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் அவரது அலுவலகத்தில் இன்று வெளியிட்டார்.

அதன்படி புதுச்சேரி மாவட்டத்தில் 8,51,775 மொத்த வாக்காளர்கள் உள்ளனர், இதில் ஆண்கள் 3,99,771, நபர்களும் பெண்கள் 4,51,869 நபர்களும் மூன்றாம் பாலினம் 135 பேரும் உள்ளனர். மேலும் இறப்பு, நிரந்தரமாக, குடிபெயர்ந்த, இரட்டை வாக்காளர் என 85,531 நீக்கப்பட்டுள்ளனர். இது மொத்த வாக்காளர்களில் 10.04% ஆகும்.

இதுதொடர்பாக ஆட்சியர் குலோத்துங்கன் கூறுகையில், "புதுச்சேரியில் 16,171 வாக்காளர்கள் மரணம் அடைந்துவிட்டனர். 45 ஆயிரத்து 312 வாக்காளர்கள் வேறு இடத்திற்கு குடிபெயர்ந்துவிட்டனர். 22,077 பேர் வாக்காளர்கள் குறிப்பிட்ட விலாசத்தில் இல்லாதவர்கள். 1,627 வாக்காளர்கள் ஏற்கனவே வேறு சட்டமன்ற தொகுதியில் வாக்காளர் பட்டியல் இடம் பெற்றுள்ளார்கள். 344 வாக்காளர்கள் வேறு காரணங்களாக நீக்கப்பட்டனர்.

வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் அந்தந்த வாக்குச்சாவடிகளில் ஒட்டப்பட்டுள்ளது வாக்காளர்கள் தங்களது பெயர்களை சரி பார்த்துக் கொள்ள வேண்டும் தகுதியான வாக்காளர்கள் நீக்கப்பட்டிருந்தால் இன்று முதல் ஜனவரி 15ம் தேதி வரை உரிமை கோரல் செய்ய முடியும். தவறான வாக்காளர் சேர்க்கப்பட்டிருந்தால் ஜனவரி 15ம் தேதி வரை மறுப்பு தெரிவிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

# சம கல்வி உரிமையைப் பறிக்கும் திமுக அரசுக்கு கோர்ட் சம்மட்டி அடி; நயினார் நாகேந்திரன்



சென்னை, டிச.17-

சமகல்வி உரிமையைப் பறிக்கும் திமுக அரசுக்கு நீதிமன்றம் சம்மட்டி அடி கொடுத்துள்ளது என தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில், ஜவஹர் நவோதயா வித்யாலயா பள்ளிகள் அமைப்பது தொடர்பான வழக்கில், 'தமிழக மாணவர்களை அழுத்தத்திற்கு ஆளாக்காதீர்கள்; உங்கள் மொழிப் பிரச்னைகளை நீதிமன்றத்திற்கு கொண்டு வராதீர்கள்' என, தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் அறிவுரை வழங்கியது.

இது தொடர்பான செய்தி நமது நாளிதழில் வெளியாகி இருந்தது. இந்த செய்தியை மேற்கொள் காட்டி, நயினார் நாகேந்திரன் வெளியிட்ட அறிக்கை: சம கல்வி உரிமையைப் பறிக்கும் திமுக அரசுக்கு நீதிமன்றம் சம்மட்டி அடி கொடுத்துள்ளது.

கல்வியில் சிறந்து விளங்கும் கிராமப்புற மாணவர்களுக்கு இலவச உண்டு உறைவிட வசதியுடன் தரமான கல்வியை நல்கும் ஜவஹர் நவோதயா பள்ளிகளைத் தனது அற்ப அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக தமிழகத்தில் வரவிடாமல் தடுக்கும் திமுக அரசைத் தனது கேள்விகளால் துளைத்தெடுத்துள்ளது உச்ச நீதிமன்றம்.

நாடு முழுவதும் உள்ள 650 நவோதயா பள்ளிகள் மூலம் பல்லாயிரக்கணக்கான கிராமப்புற மாணவர்கள் பயன்பெற்று வரும் நிலையில், பெயருக்கு மொழியைக் காரணம் காட்டி மறுத்து, தமிழக கிராமப்புற மாணவர்களை முன்னேறவிடாமல் தடுப்பது முறையானதல்ல எனச் சரியாக சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழகத்தில் பல பள்ளிகள் இருக்கிறதென்றால், கல்வியில் சிறந்து விளங்கும் கிராமப்புற மாணவர்களுக்கான பள்ளியும் இருந்தால் என்ன தவறு என்று சுருக்கென்று கேட்டதோடு, பள்ளிகள் பெருகும் போது தான் முன்னேறும் வாய்ப்புகளும் பெருகும் எனச் சுட்டிக்காட்டி திமுக அரசைத் தலையில் நறுக்கென்று குட்டு வைத்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

இத்தனை ஆண்டுகள் ஏழை எளிய கிராமப்புற மாணவர்களின் எதிர்காலத்தைச் சிதைத்த பாவத்திற்கு பிராயச்சித்தமாக உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க மாவட்டந்தோறும் நவோதயா பள்ளி அமைப்பதற்காக நிலத்தை திமுக அரசு கண்டறிய வேண்டும்.

திமுக அரசு ஒருவேளை இந்த நீதிமன்ற உத்தரவையும் வழக்கம்போல் அவமதித்தாலும் பிரச்னை யில்லை, அடுத்து அமையவிருக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியால் தமிழகம் முழுவதும் நவோதயா பள்ளிகளைத் தொடங்கி, தமிழகத்தின் கல்வித் தரத்தை முன்னேற்றி, மாணவர்கள் சிறந்து விளங்கச் செய்யப்படும். இது உறுதி. இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

# வரும் 20ம் தேதி அ.தி.மு.க., ஆர்ப்பாட்டம்



சென்னை, டிச.17-

அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி அறிக்கை:

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் நகரின் மையப் பகுதியில், தற்போதுள்ள பஸ் நிலையம், 1992ம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சியில் திறக்கப்பட்டது.

தேவையில்லாமல் இந்த பஸ் நிலையத்தை, கும்பகோணம் நகரிலிருந்து, 10 கி.மீ., தொலைவில் உள்ள கருப்பூர் கிராமத்திற்கு மாற்றும் முயற்சியில், தி.மு.க., அரசு ஈடுபட்டுள்ளது.

கருப்பூர் பகுதியில் கும்பகோணம் தி.மு.க., எம்.எல்.ஏ., சில அதிகாரிகள் மற்றும் அவர்களின் பினாமிகளுக்கு சொந்தமான நிலங்கள், அதிக அளவில் உள்ளதாக கூறப்படுகிறது. அந்த நிலங்களின் மதிப்பை உயர்த்தும் சுயநல நோக்குடன், புதிய பஸ் நிலையம் அமைக்க, விவசாய நிலங்களை கையகப்படுத்தி வருவதாக, கும்பகோணம் மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

அதோடு கும்பகோணம் மாநகராட்சியில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. இதற்கு காரணமான தி.மு.க., அரசையும், மாநகரா ட்சியையும் கண்டித்து, அ.தி.மு.க., சார்பில், வரும் 20ம் தேதி, கும்பகோ ணத்தில் ஆர்ப்பாட்டம் நடக்கும்.

# தர்மபுரியில் சோகம்; பைக், கார் மீது லாரி மோதி 4 பேர் பலி



தர்மபரி, டிச.17-

தர்மபுரியில் கட்டுப்பாட்டை இழந்த லாரி, பைக், கார் மீது மோதி ஏற்பட்ட விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

தர்மபரி மாவட்டம் தொப்பூர் அருகே சேலம் கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் சேலம் நோக்கி சென்ற லாரி, கட்டுப்பாட்டை இழந்து முன்னால் சென்று கொண்டிருந்த பைக், கார் மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் 3 பேர் பலத்த காயம் அடைந்துள்ளனர். இவர்கள் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. இந்த விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரிக்கின்றனர்.



# அருட்காட்சியகத்தில் இருந்து நேரு ஆவணங்கள் காணாமல் போகவில்லை: பார்லியில் மத்திய அரசு தகவல்

டில்லி, டிச.17-

நேருவின் ஆவணங்கள் காணாமல் போனதாக சில அறிக்கைகள் இருந்தாலும், பிரதமர் அருங்காட்சியகம் மற்றும் நூலகத்தின் 2025ம் ஆண்டு ஆய்வின் படி எந்த ஆவணங்களும் காணாமல் போகவில்லை என லோக்சபாவில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் ராஷ்டிரபதி பவனின் தெற்கு பகுதியில் மாருதி வளாகத்தில் பிரதமர்கள் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு உள்ளது. நாட்டின் தனித்துவமான பங்களிப்பை வழங்கிய அனைத்து பிரதமர்கள் பற்றிய தகவல்கள், இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு உள்ள மறைந்த முன்னாள் பிரதமர் ஆவணங்கள் காணாமல் போனதாக குற்றச்சாட்டு எழுந்தது.

கடந்த ஜூன் மாதம் பிரதமர் மோடி பங்கேற்ற இந்தியப் பிரதமர் அருங்காட்சியகம் மற்றும் நூலகம் ஆண்டு பொதுக்குழுவில் கேள்வி எழுப்பப்பட்டு இருந்தது. இது தொடர்பாக பார்லிமென்ட் குளிர்கால கூட்டத்தொடரில் மத்திய கலாசாரத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் அளித்த பதில்:

நேருவின் ஆவணங்கள் காணாமல் போனதாக சில அறிக்கைகள் இருந்தாலும், பிரதமர் அருங்காட்சியகம் மற்றும் நூலகத்தின் 2025ம் ஆண்டு ஆய்வின் படி எந்த ஆவணங்களும் காணாமல் போகவில்லை. ஆண்டுதோறும் ஆவண தணிக்கை நடத்துவது இல்லை.

அருங்காட்சியக ஆண்டு பொதுக்குழுவில் நேரு தொடர்பான ஆவணங்கள் காணாமல் போனதாக கூறப்பட்டாலும் ஆவணங்கள் ஆய்வின் போது ஏதும் கண்டறியப்படவில்லை. இவ்வாறு கஜேந்திர சிங் கூறியுள்ளார்.

# பாலியல் தொல்லைக்கு கட்டப் பஞ்சாயத்து: உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்கு அன்புமணி வலியுறுத்தல்



சென்னை, டிச.17-

தருமபுரியில் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர் மற்றும் அவரின் தவறை மூடி மறைக்க கட்டப்பஞ்சாயத்து செய்த கல்வித்துறை அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில்: “தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளியை அடுத்த குடிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் 9ம் வகுப்பு மாணவிக்கு அந்தப் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக பணியாற்றி வந்த மணிவண்ணன் என்பவர் பாலியல் தொல்லை கொடுத்ததாகவும், இதற்குக் காரணமான ஆசிரியர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் கட்டப் பஞ்சாயத்து செய்து அவர் தப்பிக்க விடப்பட்டதாகவும் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. அரசுப் பள்ளிகளில் பயிலும் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழலை திமுக அரசு உருவாக்கியிருப்பது கண்டிக்கத்தக்கது.

குடிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் பயின்று வரும் மாணவிகளை விளையாட்டுப் பாடவேளைக்கு பள்ளியில் இருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திடலுக்கு அழைத்துச் சென்ற உடற்கல்வி ஆசிரியர் மணிவண்ணன், ஒரு மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்திருக்கிறார் என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இது தொடர்பாக மாணவி அவரது பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து அவர்கள் பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் புகார் செய்துள்ளனர். அதனடிப்படையில் அவர் நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக ஊர் முக்கியப் பிரமுகர்களிடம் பேசி பிரச்சினையைத் தீர்க்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

அதைத் தொடந்து அந்தப் பகுதியைச் சேர்ந்த உள்ளாட்சி முன்னாள், இந்நாள் பிரதிநிதிகள், வழக்கறிஞர்கள் உள்ளிட்ட சிலர் குடிப்பட்டியைச் சேர்ந்த துணை நடிகர் ஒருவரின் வீட்டில் கூடி கட்டப் பஞ்சாயத்து பேசியுள்ளனர்.

அப்போது பாதிக்கப்பட்ட மாணவிக்கு வழங்க ஆசிரியர் மணிவண்ணனிடம் ரூ.10 லட்சம் வாங்கிய கட்டப் பஞ்சாயத்து கும்பல், அதில் ரூ.6 லட்சத்தை பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்திற்கு கொடுத்துவிட்டு மீதமுள்ள தொகையை தங்களுக்குள் பிரித்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. இதில் தொடர்புடைய ஒருவர் இந்த விவரங்களை பொதுவெளியில் தெரிவித்ததைத் தொடர்ந்து தான் மாணவிக்கு இழைக்கப்பட்ட கொடுமை வெளியில் தெரியவந்துள்ளது.

பாலியல் தொல்லைக்கு ஆளாக்கப்பட்ட மாணவிக்கு நீதி வழங்க வேண்டியது ஒட்டுமொத்த சமூகத்தின் கடமை ஆகும். ஆனால், அந்த மாணவி பெரிய பின்புலம் இல்லாத குறும்பர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதையும், அவரது தந்தை இல்லாத நிலையில், தாயும் இந்த சிக்கல் தொடர்பாக அலையும் போது விபத்தில் சிக்கி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் பயன்படுத்திக் கொண்டு மாணவிக்கு கொடுமை இழைத்தவர்களை ஒரு தரப்பினர் காப்பாற்றியுள்ளனர்.

குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும் ஆசிரியர் மணிவண்ணன் இதற்கு முன் பணியாற்றிய பள்ளிகளிலும் இதே குற்றச்சாட்டுக்கு ஆளாகி பணியிட மாற்றம் செய்யப்பட்டவர் என்று கூறப்படுகிறது. ஆசிரியர்கள் எனப்படுபவர்கள் தாய், தந்தைக்கு அடுத்த நிலையில், கடவுளுக்கும் கூடுதலான இடத்தில் வைத்து மதிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களை நம்பித் தான் பெற்றோர் தங்களின் பிள்ளைகளை பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர். ஆனால், வேலிகளே பயிர்களை மேய்வதைப் போல குழந்தைகளுக்கு பாலியல் தொல்லை கொடுப்பது மன்னிக்கவே முடியாத குற்றம் ஆகும்.

இந்தக் குற்றத்தைச் செய்த ஆசிரியருக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்கியிருக்க வேண்டும். ஆனால், பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி வழங்காமல், நிதி வழங்கி சரி செய்து விடலாம் என்று ஒரு கும்பல் முயற்சி செய்திருப்பதையும், அதற்கு பள்ளி தலைமை ஆசிரியர், மாவட்டக் கல்வி அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகள் துணை போயிருப்பதையும் பார்க்கும் போது திமுக ஆட்சியில் பள்ளிக்கல்வித் துறையில் அநீதியும், குற்றவாளிகளைக் காப்பாற்றும் போக்கும் எந்த அளவுக்கு புரையோடிப்போயிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடியும். இவை அனைத்தையும் திமுக அரசு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட மாணவிக்கு நியாயம் வழங்காமல் கட்டப் பஞ்சாயத்து செய்வது தான் திமுகவின் நீதியா? என்பதை ஆட்சியாளர்கள் விளக்க வேண்டும்.

மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர் உடனடியாக கைது செய்து சிறையில் அடைக்கப்பட வேண்டும். அவரின் தவறை மூடி மறைக்கும் வகையில் கட்டப் பஞ்சாயத்து செய்தவர்களும், அதற்கு துணை நின்ற கல்வித்துறை அதிகாரிகள் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி பெற்றுத் தர பாட்டாளி மக்கள் கட்சி போராட்டம் நடத்தும்.” என்று அன்புமணி கூறியுள்ளார்.






# பெரும்பிடுது முத்தரையருக்கு தபால் தலை வெளியீடு திருப்பூர் மாவட்ட முத்தரையர் தலைவர் டாக்டர் தர்மராஜ் நன்றி

திருப்பூர், டிச.17-

பெரும்பிடுது முத்தரையருக்கு தபால் தலை வெளியீடு மத்திய அரசுக்கு திருப்பூர் மாவட்ட முத்தரையர் ஒருங்கிணைப்பு குழு தலைவர் டாக்டர் தர்மராஜ் நன்றி கூறினார்.

தஞ்சை மண்டலத்தை உருவாக்கிய முத்தரையர் அரசர்களின் சிறந்து விளங்கிய பேரரசர் பெரும்பிடுகு முத்தரையருக்கு அவர் புகழை போற்றும் விதமாக தபால் தலை வெளியிடப்பட்டுள்ளது பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் தனது எந்த போரிலும் தோற்றதில்லை என்பது பெருமைக்குரியது மற்றும் அவர் போருக்கு செல்லும் பொழுது வெற்றியை நிர்ணயித்து வாகைப்பூ அணிந்து சென்றவர் மற்றும் தமிழுக்கு மெய் கீர்த்தி கண்ட அரசரும் அவரே அவர் புகழுக்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாக பிரதமர் மோடி அவர்களின் மத்திய அரசு தபால்தலை வெளியிட்டுள்ளது அதற்காக பிரதமர் அவர்களுக்கும் சிபி ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் நிர்மலா சீதாராமன் அவர்களுக்கும் திருப்பூர் மாவட்ட முத்தரையர் ஒருங்கிணைப்பு குழு தலைவரும் சுவரன் மாறன் கல்வி அறக்கட்டளையின் நிறுவனரும் டாக்டர் தர்மராஜ் அவர்கள் நன்றி கூறினார்.



■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத்தேர்தல் 2026 மதுரை மாவட்டத்தில் வாக்கு எண்ணும் மையம் அமைப்பது குறித்து தொடர்பாக மதுரை கிழக்கு வட்டம், ஒத்தக்கடையில் உள்ள விவசாயக் கல்லூரியில் ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த் இ.கா.ப.,உள்ளிட்ட வருவாய்த் துறை மற்றும் பொதுப்பணித்துறை துறை அலுவலர்கள் உடன் உள்ளனர். வாக்கு எண்ணும் மையத்தில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் தனித்தனியாக அமைக்கப்படவுள்ள வாக்கு எண்ணும் அறைகள், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பாக வைப்பதற்கான காப்பறைகள், தபால் வாக்குகள் வைக்கப்படும் காப்பறைகள், தேர்தல் பார்வையாளர் அறை, தேர்தல் நடத்தும் அலுவலர் அறை உள்ளிட்ட வசதிகளை அமைப்பதற்கு தேவையான அறைகள் உள்ளதா எனவும், போதிய அடிப்படை வசதிகள் உள்ளதா என்றும் விரிவாக பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



■ தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பாரதிய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாக மாநில தலைவர் கே ஏ முருகன் ஜி அவர்கள் தலைமையில் மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் ..... மாநில அமைப்புச் செயலாளர் எம் பி எஸ் முருகன் அவர்கள் தலைமையில் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இடம் திருப்பரங்குன்ற மலை மேல் தீபம் ஏற்றுவது தொடர்பாக நீதி அரசர் சுவாமிநாதன் அவர்கள் வழங்கிய தீர்ப்பை இந்து அறநிலையத்துறை அமல்படுத்த கோரியின் தமிழகத்தில் பெரும்பான்மையாக வாக்கு வித்தியாசத்தில் வாழக்கூடிய இந்து மக்களின் மனதிற்கு மதிப்பு அளிக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக உத்தரவிட வேண்டும் என்று கூறி பாரதிய பார்வர்ட் பிளாக் கட்சியில் தேனி மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து மனு அளிக்கப்பட்டது இந்த மனுவிற்கு இந்து அறநிலைத்துறையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் பரிசீலனை செய்து மதுரை உயர்நீதிமன்ற நீதி அரசர் சுவாமிநாதன் வழங்கிய தீர்ப்பை உடனடியாக அமல்படுத்த கோரி வலியுறுத்தப்பட்டது ....




■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு இந்திய கட்டுமான தொழிலாளர் சங்கம், திண்டுக்கல் மாவட்ட குழு சார்பில் பொங்கல் தொகுப்புடன் போனஸ் ரூ. 5000/ வழங்கிட கோரியும், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




■ திண்டுக்கல் வழக்கறிஞர் சங்கம் சார்பாக வழக்கறிஞர்கள் பழைய நீதிமன்றத்தில் இருந்து ஊர்வலமாக தலைமை தபால் நிலையம் சென்று E-Filingஐ முழுமையாக நிறுத்தி வைக்க கோரி உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகளுக்கு பதிவு தபால்கள் அனுப்பினர்



■ திருப்பூர் சிக்கனா கல்லூரியில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான டேக்வாண்ட போட்டி நடைபெற்றது போட்டியில், கிட்ஸ் கிளப் மெட்ரிக் பள்ளி மாணவன் 14 வயதுக்கு உட்பட்டவர்கள் பிரிவில் சஞ்சய் முதலிடமும் மாணவியர் 14 எதுக்கு உட்பட்டோர் பிரிவில் ஆத்திஃபா நிகாதா முதலிடம் பெற்று மாநில அளவில் போட்டிக்கு தேர்வு பெற்றனர். மேலும் 7 மாணவர்கள் இரண்டாம் இடமும் 10 மாணவர்கள் மூன்றாம் இடமும் பெற்றனர் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களை பள்ளியின் தலைவர் மோகன் கே கார்த்திக் தாளாளர் வினோதினி கார்த்திக் செயலாளர் நிவேதிகா ஸ்ரீராம் இயக்குனர் ஐஸ்வர்யா நிக்கில் சுரேஷ் பள்ளி முதல்வர் உடற்கல்வி ஆசிரியர்கள் சண்முக நதி, ராஜ்குமார், சாதனா, மற்றும் அஜித் குமார் தங்களது வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்

# பாக். தூண்டிவிடும் பயங்கரவாதத்தை முழு பலத்துடன் எதிர்கொள்வோம்: ஐநாவில் இந்தியா திட்டவட்டம்

நியூயார்க், டிச.17-

''பாகிஸ்தானால் தூண்டிவிடப்படும் பயங்கரவாதத்தை இந்தியா தனது முழு பலத்துடன் எதிர்கொள்ளும்'' என ஐநாவில் இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி பர்வதனேனி ஹரிஷ் திட்டவட்டமாக தெரிவித்தார்.



ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் நடந்த விவாதத்தின் போதுபர்வதனேனி ஹரிஷ் பேசியதாவது: ஜம்மு காஷ்மீர் எப்போதும் இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் பிரிக்க முடியாத பகுதி என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். பயங்கரவாதத்தின் உலகளாவிய மையமாக பாகிஸ்தான் திகழ்ந்து வருகிறது. இந்தியா 65 ஆண்டுகளுக்கு முன்பு, நல்லெண்ணம் மற்றும் நட்புறவின் அடிப்படையில் சிந்து நதி நீர் ஒப்பந்தத்திற்கு சம்மதம் தெரிவித்தது.

பாகிஸ்தான் மூன்று போர்களையும் ஆயிரக்கணக்கான பயங்கரவாதத் தாக்குதல்களையும் இந்தியா மீது தொடுத்து, ஒப்பந்தத்தின் உணர்வை மீறியுள்ளது. இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாத தாக்குதலில் ஒரு வெளிநாட்டவர் உட்பட 26 பேர் கொல்லப்பட்டனர். பாகிஸ்தானின் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வரை, இந்த ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்படும் என்று இந்தியா இறுதியாக அறிவித்துள்ளது.

பாகிஸ்தானால் தூண்டிவிடப்படும் பயங்கரவாதத்தை இந்தியா தனது முழு பலத்துடன் எதிர்கொள்ளும். பாகிஸ்தான் பாகிஸ்தான் ஒரு முன்னாள் பிரதமரை சிறையில் அடைப்பது, அரசியல் கட்சியைத் தடை செய்வது மற்றும் அதன் ஆயுதப் படைகள் 27வது திருத்தத்தின் மூலம் ஒரு அரசியலமைப்பு சதியை அரங்கேற்றி, அதன் பாதுகாப்புப் படைத் தளபதிக்கு வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு வழங்குகிறது. பாகிஸ்தான் இந்தியாவுக்கும், மக்களுக்கும் தீங்கு விளைவிப்பதில் தீவிர கவனம் செலுத்துகிறது. இவ்வாறு இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி பர்வதனேனி ஹரிஷ் கூறினார்.

# தமிழ்நாடு அரசு அலுவலக ஒன்றியத்தின் மாநில நிர்வாகிகளின் பயிற்சி பட்டறை

## வருகின்ற 20, 21 தேதிகளில் நடைபெறுகிறது

ஏலகிரி, டிச.17-

தமிழ்நாடு அரசு அலுவலக ஒன்றியத்தின் மாநில நிர்வாகிகளின் பயிற்சி பட்டறை வருகின்ற 20, 21 சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களில் காலை முதல் ஒய்.எம்.சி.ஏ. கூட்டரங்கம், தயாலூர், ஏலகிரியில் ஒன்றியத்தின் இளைஞரணி, மகளிர் அணி, தொழில் நுட்ப அணி, இலக்கிய அணி மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு, தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநில தலைவர் வெ. மகேந்திராகுமார் அனைத்து நிர்வாகிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.





# திருநெல்வேலி ராதாபுரம் தொகுதியில் எடப்பாடி பழனிசாமி போட்டியிட வேண்டும் EX எம்.பி சௌந்தரராஜன் விருப்ப மனு

திசையன்விளை.டிச.17-

திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் சட்டமன்ற தொகுதியில் முன்னாள் முதல்வரும் அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி போட்டியிட முன்னாள் எம்.பி சௌந்தரராஜன் அதிமுக தலைமை கழகத்தில் விருப்ப மனு வழங்கினார்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் மக்களாட்சி மலர்ந்திட வேண்டும் என்பதற்காக, அவர் ராதாபுரம் சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்து, திருநெல்வேலி புறநகர் மாவட்ட கழகப் பொருளாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சௌந்தர்ராஜன் விருப்ப மனுவை சமர்ப்பித்தார். அதிமுக தலைமைக் கழகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கழகத் துணைப் பொதுச்செயலாளர்கள் கே.பி.முனுசாமி எம்எல்ஏ, நத்தம் ஆர்.விஸ்வநாதன் எம்எல்ஏ, கழகப் பொருளாளர் திண்டுக்கல் சி. சீனிவாசன் எம் எல்ஏ, கழக தலைமை நிலைய செயலாளர் எஸ்.பி.வேலுமணி எம்எல்ஏ, கழக அமைப்புச் செயலாளர் தங்கமணி எம்எல்ஏ ஆகியோரிடம் விருப்ப மனுவை சமர்ப்பித்தார்.



■ திராவிட முன்னேற்றக் கழகம் திருப்பூர் வடக்கு மாநகரம் வேலம்பாளையம் பகுதி கழகத்திற்கு உட்பட்ட 9வது வட்டக் கழகம் பாகம் எண் 72ல் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனைக் கூட்டம் பிஎல்ஏ 2 சசிகுமார் தலைமையிலும், ஜெரோம்ராஜ் மற்றும் முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாட்டின் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் பெண்களுக்காக மாதம் ஆயிரம் மகளிர் உரிமைத் தொகை கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம், இலவச பஸ் பயணத்திட்டம் போன்ற சிறப்பான திட்டங்களின் மூலம் திரளான பெண்களும் ஆண்களும் கலந்து கொண்டனர். மேலும் ஓரணியில் தமிழ்நாடு மூலம் உறுப்பினராக சேர்க்கப்பட்டவர்களின் குடும்பத்தில் ஒரு நபர் வீதம் 78 குடும்பங்களை சார்ந்த வாக்காளர்கள் கலந்து கொண்டனர். அவர்களிடம் ஒவ்வொருவரும் தலா ஐந்து நபர்களாவது கழகத்தின் புதிய வாக்காளர்களாக சேர்க்க வேண்டும் என்று திருப்பூர் வடக்கு மாநகர கழகப் பொறுப்பாளர் ஈ. தங்கராஜ் ஆலோசனைகளை வழங்கினார். உடன் 15.வேலம்பாளையம் பகுதி கழகச் செயலாளர் கொ. இராமதாஸ் அவர்களும் வட்டக் கழக செயலாளர் எஸ். ஸ்ரீதர் அவர்களும் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர். மேலும் மாவட்ட,மாநகர,பகுதி, வட்ட, கழக நிர்வாகிகளும் சார்பு அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# காந்திகிராம பல்கலைக்கழகத்தின் இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சங்கத்தின் சார்பில் கருத்தரங்கம் பல்கலை துணைவேந்தர் ந.பஞ்சநதம் கருத்தரங்கை துவக்கி வைத்தார்

சின்னாளபட்டி டிச.17-

காந்திகிராம பல்கலைக்கழகத்தின்; இயற்பியல் துறை சார்பாக நடைபெற்ற இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சங்கத்தின் சார்பில பயன்பாட்டு அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில்; தற்காலபோக்குகள் குறித்த கருத்தரங்கை பல்கலை துணைவேந்தர் ந.பஞ்சநதம் துவக்கிவைத்தார்.



திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராமம் பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறை சார்பாக இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சங்கத்தின் சார்பில பயன்பாட்டு அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில்; தற்காலபோக்குகள் குறித்த கருத்தரங்கு நடைபெற்றது.

காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். ந. பஞ்சநதம் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முதுநிலை பேராசிரியர். அரி பொன்னம்மாள் வரவேற்று கருத்தரங்கின் நோக்கம் குறித்து எடுத்துரைத்தார். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். பு. ரவி, இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சங்க தலைவர் பேராசிரியர். ராமசாமி, துணை தலைவர் பேராசிரியர். சு.ஜெயவேல், முருகக்கூத்தன், சங்கச் செயலாளர் பேராசிரியர் ஆ. அறிவானந்தன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். கருத்தரங்கில் பேராசிரியர்கள் மற்றும் ஆய்வு மாணவர்கள் ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்து உரையாற்றினர். கருத்தரங்கு நிறைவு விழாவில் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) முதுநிலை பேராசிரியர் ஆ.சுந்தரமாரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார்.

# துபாயில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஆசிய பாரா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் முதன்முறையாக இந்தியா சார்பில் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்தார் திண்டுக்கல் ராஜன்

சின்னாளபட்டி டிச.17-

தமிழ்நாடு டேக்வாண்டோ சங்கத்தின் வரலாற்றுச் சாதனை படைத்த திண்டுக்கல் ராஜன் உள்விளையாட்டு அரங்க விளையாட்டு வீராங்கனை மாணவி லின்சியாவிற்கு பாராட்டுக்கள் குவிகிறது. துபாயில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஆசிய பாரா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் முதன்முறையாக இந்தியா சார்பில் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.




40 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டில் டேக்வாண்டோ பயிற்சி செய்யப்பட்டு வருகிறது, ஆனால் இதுவரை, ஆசிய விளையாட்டு, ஒலிம்பிக் அல்லது பாராலிம்பிக்கில் தமிழகம் ஒரு பதக்கம் கூட பெறவில்;லை. தமிழகத்தைச் சேர்ந்த திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டி பிரிவு ராஜன் உள் விளையாட்டு அரங்க பயிற்சியாளர் பிரேம்நாத்திடம் பயிற்சி பெற்ற மாணவி வெற்றி வீராங்கனை லின்சியா துபாயில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஆசிய பாரா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் முதன்முறையாக இந்தியா சார்பில் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்தார். இது தமிழகத்திற்கு கிடைத்த மிகப்பெரிய பாராட்டாகும்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல், நமது தேசிய கூட்டமைப்பு இந்திய டேக்வாண்டோவின் வலுவான ஆதரவுடன் டேக்வாண்டோ சங்கம் தமிழ்நாடு உருவெடுத்த பிறகு சாத்தியமானது. திரு. நாம்தேவ் ஐயா அவர்களின் துடிப்பான தொலைநோக்குப் பார்வையும், தடகள மேம்பாட்டிற்கான அர்ப்பணிப்புடன் விளையாட்டை மாற்றியமைத்ததால், தமிழ்நாடு டேக்வாண்டோ புதிய வரலாறு படைத்துள்ளது.

இந்த வெண்கலப் பதக்கம் தமிழகத்திலும் இந்தியாவிலும் பாரா டேக்வாண்டோவிற்கு ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

புரோஒலிம்பிக்கில் வெங்கல பதக்கம் பெற்ற மாணவி லின்சியாவிற்கும், பயிற்சியாளர் மாஸ்டர் எம்.பிரேம்நாத்திற்கும் பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளது. குறிப்பாக திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு வீராங்கனை பாரா ஒலிம்பிக்கில் சாதனை படைத்துள்ளது திண்டுக்கல் மாவட்டத்திற்கு பெருமையைத் தேடித்தந்துள்ளது.



# முன்னாள் அமைச்சர் உடுமலை கே ராதாகிருஷ்ணன் எம் எல் ஏ பிறந்த நாள் விழாவில் 500க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர் அஇஅதிமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர்

திருப்பூர், டிச.17-

திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் உடுமலை சட்டமன்ற உறுப்பினருமான உடுமலை கே. ராதாகிருஷ்ணன் பிறந்த நாள் விழாவில் 500க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர் ஊஞ்சவேலாம்பட்டி ட்ரிபிள் எஸ் பிரதர்ஸ் எம் சக்திவேல் தலைமையில் கழகத்தில் இணைந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் கௌதம், கிரிபிரசாத், தனுஷ் , அகில் ,சபரி கோலார்பட்டி எம்எல்ஏ இல்லத்தில் பிறந்த நாள் விழாவில் மாற்றுக் கட்சியினர் அஇஅதிமுகவில் தங்களை உறுப்பினர்களாக இன்று முதல் இணைத்துக் கொண்டனர். பிறந்தநாள் விழாவில் கேக் வெட்டி கொண்டாடினர்.





# தேனியில் மாற்றுக்கட்சியினர் பாரதிய ஜனதா கட்சியில் இணையும் விழா

தேனி டிச.17-

தேனியில் உள்ள வி.கே.வேலுச்சாமி திருமண மண்டபத்தில், மாற்றுக் கட்சியில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாரதிய ஜனதா கட்சியில் இணையும் விழா பாஜக மாநில பொதுச் செயலாளர் பேராசிரியர் இராம ஸ்ரீனிவாசன் முன்னிலையிலும், பாஜக தேனி மாவட்ட தலைவர் இராஜபாண்டியன் முன்னிலையிலும், தேனி மாவட்ட அரசு தொடர்பு பிரிவு மாவட்ட செயலாளர் நிதிஸ்குமார் தலைமையிலும் நடைபெற்றது. இந்த நிகழ்வில், பல்வேறு மாற்றுக் கட்சிகளில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாரதிய ஜனதா கட்சியில் "பாரத் மாதா கி ஜே" என்கிற கோஷத்துடன் தங்களை இணைத்துக் கொண்டனர். நிகழ்வில், பாஜக மாவட்ட ஊடக பிரிவு நிர்வாகிகள், பெரியகுளம் கிழக்கு மேற்கு ஊடக பிரிவு செயலாளர்கள், பாரதிய ஜனதா கட்சியின் மூத்த நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ இந்த ஆட்சிமொழிச்சட்ட வார விழா தொடர்பான நிகழ்வின் ஒருபகுதியாக 17.12.2025 அன்று தமிழ் அமைப்புகள், நிர்வாகிகளுடன் இணைந்து சின்னமனூர் கிளை நூலகத்தில் ஆட்சிமொழித்திட்ட விளக்கக் கூட்டமும், 18.12.2025 அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் தொழிலாளர் துறையினருடன் வணிக நிறுவன உரிமையாளர்கள், வணிக நிறுவன அமைப்புகளுடன் இணைந்து வணிக நிறுவனங்களின் தமிழில் பெயர்ப்பலகை அமைத்திட வலியுறுத்தி தொழிலாளர் உதவி ஆணையர் (சட்ட அமலாக்கம்) அலுவலகத்தில் கலந்தாய்வுக் கூட்டமும் நடைபெறவுள்ளன.

# டில்லி மைதானத்தில் கால்பந்து வீரர் மெஸ்ஸி; ரசிகர்கள் உற்சாக வரவேற்பு

புதுடில்லி: டிச.17–

இந்தியாவுக்கு கால்பந்து ஜாம்பவான் மெஸ்ஸி சுற்றுப்பயணம் மேற்கொண்டு உள்ளார். மூன்றாவது நாளாக இன்றைய பயணத்தில், மெஸ்ஸி டில்லிக்கு சென்றார். அங்குள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் பிரமாண்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

மெஸ்சிக்கு நிரம்பி வழிந்த அருண் ஜெட்லி மைதானத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மெஸ்சி.. மெஸ்சி.. என்ற ரசிகர்களின் கோஷத்தால் அருண் ஜெட்லி மைதானம் அதிர்ந்தது.

அங்கு அவர் ரசிகர்களை நோக்கி கால்பந்துகளை வீசினார். மெஸ்ஸி ஜெய் ஷாவிடமிருந்து கிரிக்கெட் பேட் மற்றும் இந்திய அணி ஜெர்சியை பரிசாக பெற்றார்.

மிக்க நன்றி

மைதானத்தில் ரசிகர்களிடம் மெஸ்ஸி பேசுகையில், 'இந்தியா வந்தது உண்மையிலேயே ஒரு அழகான அனுபவமாக இருந்தது. ரசிகர்கள் கொடுத்த அன்புக்கும், பாசத்துக்கும் மிக்க நன்றி' என தெரிவித்தார்.

# "மத்திய முகமைகளை பாஜக தவறாகப் பயன்படுத்துவது மீண்டும் அம்பலம்" : முதல்வர் ஸ்டாலின்

சென்னை: டிச.17-

நேஷனல் ஹெரால்டு வழக்குத் தீர்ப்பின் மூலம், எதிர்க்கட்சித் தலைவர்களைப் பழிவாங்குவதற்காக ஒன்றிய பாஜக அரசினால் மத்தியப் புலனாய்வு அமைப்புகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதை மீண்டுமொருமுறை நீதித்துறை அம்பலப்படுத்தியுள்ளது என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



நேஷனல் ஹெரால்டு பணமோசடி வழக்கில் காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி மற்றும் பிறருக்கு எதிராக அமலாக்கத் துறை தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையை டெல்லியில் உள்ள ரோஸ் அவென்யூ நீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது. மேலும், இது தொடர்பாக மேலதிக விசாரணையைத் தொடருமாறும் அமலாக்கத் துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், இது குறித்து முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில், "நேஷனல் ஹெரால்டு வழக்குத் தீர்ப்பின் மூலம், எதிர்க்கட்சித் தலைவர்களைப் பழிவாங்குவதற்காக ஒன்றிய பாஜக அரசினால் மத்தியப் புலனாய்வு அமைப்புகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதை மீண்டுமொருமுறை நீதித்துறை அம்பலப்படுத்தியுள்ளது.

சட்டரீதியான எந்தவொரு முகாந்திரமும் இன்றி, இத்தகைய வழக்குகள் அரசியல் எதிரிகளைத் துன்புறுத்தவும் களங்கப்படுத்தவுமே தொடரப்படுகின்றன.

உண்மையையும் அச்சமின்மையையும் தங்கள் பக்கம் கொண்டுள்ள நாடாளுமன்றக் காங்கிரஸ் குழுத் தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், எனது சகோதரருமான ராகுல் காந்தி தவறிழைக்காதது நிரூபணமாகியுள்ளது. ஆனாலும், மதச்சார்பின்மை மற்றும் அரசியலமைப்பின் மாண்புநெறிகளில் அவர்கள் உறுதியாக நிற்பதைப் பொறுத்துக்கொள்ள முடியாத பாஜக காந்தி குடும்பத்தினரைத் தொடர்ந்து வேட்டையாடுவதில் குறியாக உள்ளது.

பாஜகவின் இந்தப் பழிவாங்கும் நோக்கம் நாட்டின் உயர் புலனாய்வு அமைப்புகளின் நம்பகத்தன்மையை மீண்டும் மீண்டும் சிதைத்து, அவற்றை வெறுமனே அரசியல் எதிரிகளை அச்சுறுத்துவதற்கான கருவிகளாகச் சுருக்குகின்றது." இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

# தமிழக மொழிப்போர் தியாகிகள் சங்கத்தலைவர் சின்னாளபட்டி இராமு.ராமசாமிக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி நிதியுதவி

## தொகுதியில் உள்ள அனைவருக்கும் நலத்திட்ட உதவிகள் மற்றும் மருத்துவ உதவிகளை தொடர்ந்து செய்து வரும் அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு சமூக ஆர்வலர்கள் பாராட்டு

சின்னாளபட்டி, டிச.17-

தமிழக எல்லை மொழிப்போர் தியாகிகள் சங்கத்தலைவர் சின்னாளபட்டி இராமுஇராமசாமிக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் நிதியுதவியுடன் மருத்துவ சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ததற்கு தமிழ்மொழி வளர்ச்சி தமிழக எல்லை மொழிப்போர் தியாகிகள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு பாராட்டும், நன்றியும் தெரிவித்துள்ளனர்.





திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டியை சேர்ந்தவர் தியாகி இராமு. ராமசாமி இவர் தமிழ்மொழி வளர்;சசி தமிழக எல்லை மொழிப்போர் தியாகிகள் சங்க தலைவராகவும், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி மாவட்ட துணைத்தலைவராகவும் பதவியில் உள்ளார். இந்திராகாந்தி முதல் ஜி.கே.மூப்பனார், குமரி ஆனந்தன், வெங்கட்ராமன், ராஜிவ்காந்தி, சோனியாகாந்தி, நெடுமாறன் உட்பட பல அரசியல் கட்சி தலைவர்களுடன் நெருங்கி பழகியும் உள்ளார். தற்போது தமிழக அரசு தமிழக எல்லைப்போராட்ட தியாகிகளுக்கும், தமிழறிஞர் (மொழிப்போர்) தியாகிகளுக்கும் வழங்கிவரும் மாதாந்திர ஓய்வூதியத்தைக் கொண்டுதான் வாழ்க்கை நடத்தி வருகிறார். தற்போது உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவ உதவி வேண்டி அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை நேரில் சந்தித்து, கோரிக்கை விடுத்தார். உடனடியாக அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக நிதியுதவி வழங்கியதுடன் மருத்துவ சிகிச்சைக்காக ஏற்பாடு செய்துள்ளார். மொழிப்போர் தியாகி இராமஇராமசாமி கேட்டவுடன் வரம் கொடுத்த தெய்வம் போல் தனக்கு நிதி உதவி வழங்கிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தார். இந்தச் செய்தியை கேள்விப்பட்ட தமிழ்மொழி வளர்;சசி தமிழக எல்லை மொழிப்போர் தியாகிகள் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு மனதார பாராட்டும், நன்றியும் தெரிவித்துள்ளனர். இது குறித்து தமிழ்மொழி வளர்;சசி தமிழக எல்லை மொழிப்போர் தியாகிகள் சங்க நிர்வாகிகள் கூறுகையில் மாற்றுக் கட்சியை (காங்கிரஸ்) சேர்ந்தவர் என்ற பாகுபாடு இல்லாமல் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் எங்கள் சங்கத்தலைவர் இராமு.ராமசாமி ஐயா அவர்களுக்கு நிதி உதவி வழங்கியதுடன் மருத்துவ சிகிச்சைக்கும் ஏற்பாடு செய்துள்ளார். அவருக்கு எங்கள் சங்கம் சார்பாக மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம் என்றனர்.

# இது விபத்து அல்ல; திமுகவின் அலட்சியத்தால் ஏற்பட்ட கொலை: அண்ணாமலை காட்டம்

சென்னை, டிச.17-

அரசு பள்ளி கட்டடம் இடிந்து மாணவர் உயிரிழந்தது விபத்தாக எடுத்துக் கொள்ள முடியாது. திமுக அரசின் அலட்சியத்தால் ஏற்பட்ட கொலையாகவே கருத முடியும் என தமிழக பாஜ முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை: திருவள்ளூர் மாவட்டம் கொண்டாபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி சுவர் இடிந்து விழுந்து, 7ம் வகுப்பு படிக்கும் சிறுவன் உயிரிழந்த செய்தி மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது. தங்கள் குழந்தையை இழந்து தவிக்கும் சிறுவனது பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும், ஆறுதல் சொல்ல வார்த்தையில்லை. கடந்த நான்கரை ஆண்டுகளில், தமிழகம் முழுவதும் பல மாவட்டங்களில், அரசுப் பள்ளிக் கட்டடங்கள், மேற்கூரைகள், சுற்றுச் சுவர்கள் இடிந்து விழுவது தொடர்கதை ஆகியிருக்கிறது.

ஒவ்வொரு முறையும், அரசுப் பள்ளிக் கட்டடங்களின் உறுதித் தன்மையைப் பரிசோதித்து, அரசுப் பள்ளி மாணவ, மாணவியர் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று, திமுக அரசை வலியுறுத்தி வந்திருக்கிறோம். பல பள்ளிகள், கட்டடம் இல்லாமல் மரத்தடியில் இயங்கி வருவதையும் சுட்டிக் காட்டியுள்ளோம். ஆனால், முதல்வரோ, பள்ளிக் கல்வித்துறை அமைச்சரோ, இதனைக் குறித்து எந்தக் அக்கறையும் காட்டவில்லை.

ஏழை, எளிய குழந்தைகள் படிக்கும் அரசுப் பள்ளிகளை, திமுக அரசு ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்ததன் விளைவு, இன்று வாழ வேண்டிய ஒரு குழந்தையைப் பறி கொடுத்திருக்கிறோம். இதனை விபத்தாக எடுத்துக் கொள்ள முடியாது.

திமுக அரசின் அலட்சியத்தால் ஏற்பட்ட கொலையாகவே கருத முடியும். வெறும் விளம்பர நாடகங்களை மட்டுமே, கடந்த நான்கரை ஆண்டுகளாக நடத்தி வரும் முதல்வர் ஸ்டாலின், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் மகேஷ் ஆகிய இருவருமே இதற்கு முழுப் பொறுப்பு. இனியும், அரசுப் பள்ளிக் கட்டடங்களை ஆய்வு செய்து மாணவ, மாணவியர் பாதுகாப்பை உறுதி செய்யாமலிருப்பது வெட்கக்கேடு. இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000